**கவனிக்க.-** *14.09.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2090 - 2018 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2018.09.21

*2090 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | 1454 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகம் (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) கடன் இணக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.


**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2018, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1453- B81452 - 5,403 (2018/09)

# பதவிகள் - வெற்றிடம்

## மத்திய மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கான தொழிலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2018

மத்திய மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் தொழிலாளர் பதவிக்கு இணைத்துக்கொள்வதற்குத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொது நிபந்தனைகள்**

1.1 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்.
1.2 விண்ணப்பதாரர் மத்திய மாகாணத்தில் வசிக்கக்கூடியவராக இருத்தல்.
1.3 தகுதி பூரணத்துவம் அடையும் தினத்திற்கு முன்னரான கடைசி 03 வருடங்களுக்கு குறையாமல் மத்திய மாகாணத்தில் வசிக்கக்கூடியவராக இருத்தல்.
1.4 விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல்.
1.5 பதவியில் இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பம் கோரக்கூடிய 2018.09.30 ஆந் திகதிக்கு முன் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருத்தல்.

**02. வயதெல்லை :**

2018.09.30 ஆந் திகதிக்கு 18 வயதை விடக் குறையாமலும் 45 வயதிற்குக் கூடாமலும் இருத்தல்.

**03. கல்வித் தகைமை :**

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 02 திறமைச் சித்திகளுக்கு குறையாமல் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். (நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் 2013.12.31 ஆந் திகதி EST/RECRU/02/0365 இலக்க கடிதத்தின் படி)

**04. உடற் தகுதி :**

அனைத்து விண்ணப்பதாரரும் மத்திய மாகாணத்தில் எந்தப் பகுதியிலும் வேலை செய்யக்கூடிய மனோ வலிமையையும் உடற் தகுதியையும் பெற்றிருத்தல்.

**05. தெரிவு செய்யும் முறை :**

கட்டமைப்புக்குட்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

நேர்முகத் தேர்வில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப பதவியில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தொழிலின் தன்மைக்கேற்ப தற்போது திணைக்களத்தில் தொழில் புரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்பட முடியும்.

**06. வெற்றிடங்களின் எண்ணிக்கை :**

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 12
முதற் கட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவோர் - 06
இரண்டாம் கட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவோர் - 06

**07. பதவிக்கான சம்பள அளவு :**

உ. நா. அ. சுற்றறிக்கை 03/2016 இல் PL1 - 2016 இன் படி
ரூபா 24,250 - 10X250 - 10X270 - 10X300 - 12X330 - ரூபா 36, 410

**08. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

இத் தொழில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். பதவிக்கான ஆட்சேர்ப்பு விதி முறைகளுக்கமைய நிபந்தனைகள் ஏற்புடையனவாகும்.

**09. தொழிலின் தன்மை :**

சாயமிடல், துணி துவைத்தல் உட்பட சாயமிடும் நிலையத்திலுள்ள வேலைகள்

**10. விண்ணப்பிக்கும் முறை :**

10.1 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையும் விண்ணப்பப்படிவம் A4 படிவத்தின் முன் பக்கத்தில் இல. 1 - 6 வரையிலும் அடுத்த பக்கத்தில் இல. 7 - 11 வரையிலும் உள்ளடங்கக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டும். நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2018.10.04 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், மத்திய மாகாண விளையாட்டு மற்றும் கைத்தொழில் அமைச்சு, த. பெ. இல. 41, கெட்டம்பெ, பேராதெனிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2018" என்று குறிப்பிடவும். (தற்போது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் தொழில் புரிவோர் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.)

10.2 விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்வின் போது பூர்த்தி செய்யப்படாத தகைமையுடையவராயின் தொழில் தகைமை இழந்தவராகக் கருதப்படுவார். இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத ஏதாவது கருத்து விடயத்தில் மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

டபிள்யூ. எம். கே. கே. கருணாரத்ன,
செயலாளர்,
மத்திய மாகாண விளையாட்டு மற்றும்
கைத்தொழில் அமைச்சு.

த.பெ. இல. 41,
கெட்டம்பெ,
பேராதெனிய.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் தொழிலாளர் பதவி**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் : ..........................................................................

..........................................................................................................................

1.3 தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................

2. 2.1 நிரந்தர முகவரி : ..........................................................................................

2.2 தொலைபேசி இல. : ..........................................................................................

3. 3.1 பால் (ஆண்/பெண்) : ..........................................................................................

3.2 பிறந்த திகதி : ஆண்டு : ........................... மாதம் : ..............................திகதி : ...........................

3.3 2018. 10. 04 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : .................. மாதங்கள் : ..................நாட்கள்: ..................

3.4 வதியும் மாவட்டம் : ..........................................................................................

3.5 பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................................................................

4. நேர்முகத் தேர்வுக்குத் தோற்றும் மொழி : ..........................................................................................

5. கல்வித் தகைமைகள் :

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

6. வேறு தகைமைகள் :

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

7. நீங்கள் மாகாண அரச சேவையில் இருப்பவராயின் :

7.1 தற்போதைய பதவியும் நியமனத் திகதியும் : ..........................................................................

7.2 பதவி நிரந்தரம்/தற்காலிகம்/நாட் கொடுப்பனவு : ..................................................................

7.3 தற்போதைய சேவை நிலையம், தொழில் : ..........................................................................

7.4 சேவைக் காலம் : ..........................................................................................

**08. விண்ணப்பதாரரின் உறுதியுரை**

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்குட்பட்ட வகையில் சரியானதும் உண்மையானதும் ஆகும். நான் இத்தொழிலுக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின் பொருத்தமற்றவர் என அறியப்பட்டால் தொழிலிருந்து நீக்கப்பட முடியும் என்பதையும் அறிவேன். மேலும் இந்த நேர்முகப் பரீட்சை நடத்துவது தொடர்பாக மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர், பிரதான செயலாளர், மத்திய மாகாண விளையாட்டு மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஆகியோரினால் இடப்படும் சட்ட திட்டங்களுக்கு உட்படுவதாகவும் தெரிவிக்கிறேன். மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்களில் மாற்றம் எதுவும் செய்யவும் மாட்டேன்.

.................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .................................

**09. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ் விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி .............................................................................. ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ................................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்

இறப்பர் முத்திரையும்.

திகதி : ................................

**10. நிறுவனத் தலைவரின் சான்றுறுதி**

திரு./திருமதி/செல்வி ................................................................................ ....................... ...............

.........................................................................நிறுவனத்தில் .................................... ஆந் திகதியிலிருந்து

.............................................................................. எனும் பதவியில் வேலை செய்கிறார் என்றும் அவரது சேவை

திருப்திகரமானது என்றும் உறுதிப்படுத்துவதுடன் அவர் மேற்படி தொழிலுக்குத் தெரிவாகினால் அவரை விடுவிக்க முடியும் என்றும் மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் சான்றுறுதிப்படுத்துகிறேன்.

................................

நிறுவனத் தலைவரின் கையொப்பமும்

இறப்பர் முத்திரையும்.

திகதி : ................................

09 - 901

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.